# "நீ ஆசீர்வதிக்கப்பட்டவன். நீ பெரிய காரியங்களைச் செய்வாய். மேன்மேலும் பலப்படுவாய்" I சாமு 26 : 25

**சித்தம், வழி, வேலை**

நம்முடைய வாழ்க்கையில் ஒரு காரியம் நடைபெற மூன்று முக்கிய குறிப்புகள் நிறைவேற வேண்டியதாயிருக்கிறது. இந்தமூன்றும் இணையாதடிக்கு காரியம் வாய்ப்பதில்லை.

**சங்கீதக்காரன் கூறுகிறார்.** : "என் ஆத்துமாவே, கர்த்தரையே நோக்கிக் காத்திரு"– என்பதாக. கர்த்தரை நோக்கிக் காத்திருப்பது ஒரு அனுபவம். ஆனால் கர்த்தரையே நோக்கிக் காத்திருப்பது ஒரு உன்னதமான அனுபவமாகும்.

**சங்கீதக்காரன் சொல்கிறான் :** எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என்கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும் என்பதாக.

**GOD'S WILL**: (தேவனுடைய சித்தம்) ஒரு காரியம் நிறைவேற வேண்டுமானால் முதலாவது தேவனுடைய சித்தத்திற்காக ஜெபிக்க வேண்டும்.

நாம் எதையாகிலும் தேவனுடைய சித்தத்தின் படி கேட்டால் அவர் நமக்கு செவி கொடுக்கிறார் என்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கும் தைரியம் ஆகும். இயேசுவானவர் இந்த உலகில் ஜீவித்தபொழுது, பிதாவானவர் சித்தத்திற்கு தன்னை முழுவதும் ஒப்புக்கொடுத்ததை வேதத்தில் வாசிக்கிறோம்.

பிதாவே, இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீக்கக் கூடுமானால் நீங்கட்டும். ஆகிலும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது என்றார்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே, எந்தக் காரியத்திற்காக ஜெபித்தாலும், தேவனுடைய பரிபூரண சித்தத்திற்கு ஒப்புக் கொடுங்கள்.

**BY GOD'S WAY** : கர்த்தர் தமது சித்தப்படி, நம்முடைய வாழ்க்கையில் அற்புதத்தைச் செய்யும் பொழுது, நாம் எதிர்பார்க்கிறபடி செய்கிறதில்லை. வேதம் சொல்கிறது.

"என்னுடைய வழிகள் உங்களுடைய வழிகள் அல்ல" என்பதாக அல்லேலூயா. நாகமமான் தன்னை எலிசா தீர்க்கதரிசி தடவி சுகப்படுத்துவான் என்று எதிர்பார்த்தான். ஆனால் நதியில் போய் 7 தரம் ஸ்தானம் பண்ணும் என்று சொன்னபொழுது, அவன் முக நாடி வேறுபட்டது. பின்பு வேலைக்காரன் சொன்னதை வைத்து மூழ்குவதை நாம் வேதத்தில் வாசிக்கிறோம்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே,

நீ விரும்புகிற அல்லது எதிர்பாக்கிற வழியில் கர்த்தர் காரியத்தை செய்ய மாட்டார். ஆனால் எளிமையான முறை நம்ப முடியாத முறையில் ஒரு அற்புதத்தை உனக்குச் செய்வார். இந்த மாதமே செய்வார். நம்புகிறீர்களா ?

**நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்**

**God's Time தேவனுடைய வேளை**

இது மிக முக்கியமானது. கானாவூர் கலியாணத்தில் ஒரே வாக்கியத்தில் "என் வேளை இன்னும் வரவில்லை" என்றார். காட்டிக் கொடுப்படுவதற்கு முன்பு "வேளை இன்னும் வரவில்லை" என்றார்.

சோர்ந்து போன சகோதரியே திடப்படுங்கள். கர்த்தருக்கே காத்திருங்கள். அவருடைய வேளை, வரும்பொழுது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும். இந்த மூன்று அனுபவங்கள் உங்களுடைய வாழ்க்கையில் நிறைந்திருக்குமானால்,

**என் குமாரனாகிய தாவீதே,**

**நீ ஆசீர்வதிக்கப்பட்டவன், நீ பெரிய காரியங்களை செய்வாய். மேன்மேலும் பலப்படுவாய்.** ஆமென்.

**பக்தன் பாடுகிறார்.**

தேசமே பயப்படாதே, மகிழ்ந்து களிகூறு
மன்னவன் இயேசு உந்தனுக்கே மாபெரும் காரியம் செய்திடுவார்.

இதை வாஞ்சையுடன் வாசிக்கும் என் அன்பு சகோதரனே சகோதரியே,

இந்த மாதத்தில் அடிக்கடி மேற்கண்ட பாடலை பாடுங்கள். பாடிக்கொண்டே இருங்கள். மாபெரும் காரியம் செய்திடுவார். அதுமாத்திரமல்ல உன்னைக்கொண்டும் பெரிய காரியம் செய்வார்.

"**நீ பெரிய காரியங்களைச் செய்வாய்**"– என்று மனதார வாழ்த்தி கர்த்தருடைய வார்த்தையை முடிக்கிறேன். ஆமென்

**நீ மேன்மேலும் பலப்படுவாய்.** அல்லேலூயா.